## இயேசு உங்கள் இரட்சகரா?

பதில் ஆம், அல்லது இல்லை. “ஒருவேளை” அல்லது “நான் அப்படிதான் நினைக்கிறேன்” என்பதற்கு இடமில்லை. கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார் என்று நீங்கள் உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கும்போது அவர் உங்கள் இரட்சகராக இருப்பார் (ரோமர் 4:24-25). இப்போதே அவரை நம்புங்கள், இரட்சிக்கப்படுங்கள்! அப்பொழுது அவர் பெத்லகேமில் பிறந்த இரட்சகர் மற்றுமல்லாமல், **உனது இரட்சகருமாக இருப்பார்!**

*“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” - யோவான் 3:16.*

*“கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.” - ரோமர் 10:9.*

SATHGAMAYA MEDIA FOUNDATION



*“...பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு... பிறந்திருக்கிறார்.” - லூக்கா 2:10-11.*

## இரட்சகரின் வருகை

அந்த தேவதூதன் இருளை மூழ்கடித்து இரவின் அமைதியைக் குலைத்து திடீரென்று தோன்றின விதம் மேய்ப்பர்களைப் பயமுறுத்தினாலும், இரட்சகரின் வருகையை அறிவிக்கும் அவனது செய்தி அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது! ஜனங்களுக்கு தேவனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட மேசியாவுக்காக பல ஆண்டுகள் காத்திருந்தனர். பாவம் முதன்முதலில் உலகத்தில் நுழைந்தபோது, பாவத்தையும் மரணத்தையும், சோதனைக்காரனையும், பெண்ணின் வித்தானவர் தோற்கடிப்பார், என்று தேவன் அறிவித்தார். (ஆதியாகமம் 3:15).

*“அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.” - மத்தேயு 1:21*

## இரட்சகர் தேவை

பாவத்தின் சம்பளம் மரணம், இது தேவ நீதி. நம் பாவங்கள் மன்னிக்கப்படவும், தேவ உறவு மீட்டெடுக்கப்படவும், இரட்சகர் ஒருவர் தேவை. இந்த வழியில் மட்டுமே தேவ நீதியை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியும்.

இயேசு நம்முடைய பாவத்தின் பரிகாரியாக சிலுவையில் உயிரைக் கொடுத்தார். தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

*“நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” - யோவான் 14:6.* என்று இயேசு கூறினார்.

நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்படவும், கடவுளிடமிருந்து நித்திய பிரிவினையைத் தவிர்க்கவும் விரும்பினால், நாம் இரட்சகராகிய இயேசுவை அறிந்து கொள்ள வேண்டும்!

இயேசு இரட்சிப்பின் வேலையைச் செய்திருந்தாலும், எல்லா மக்களும் இரட்சிக்கப்படவில்லை. நரகத்தின் அழிவில் நித்தியமாகத் தொலைந்து போகும் அபாயத்தைச் சிலர் கண்டுகொள்வதில்லை. பலர் தங்களைக் கடவுளுக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள், மற்றும் இரட்சகரை நிராகரிக்கிறார்கள். மற்றவர்கள் கடவுளுடைய தயவைப் பெறுவோம் என்று நினைத்து, “பல” காரியங்களை செய்கிறார்கள். ஆனால் வேதத்தின் படி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, பாவத்தை அறிக்கையிட்டு, மனம் திரும்பி அவரை நம்பி பின்பற்றினால் மட்டுமே, ஒரு பாவி இரட்சிக்கப்பட்டு அவருடைய அன்பின் நித்திய உறவுக்குள் கொண்டுவர முடியும் (அப்போஸ்தலர் 16:30-31).